සබරගමුව පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
சபரகமுவ மாகாணக் கல்வித் திணைக்களம்
Sabaragamuwa Provincial Department of Education

මධ්‍ය වාර්ෂික පරීක්ෂණය - 2015
அரையாண்டுப் பரீட்சை 2015
Mid Term Test 2015

08 ශ්‍රේණිය
தரம்-08

භූගෝල විද්‍යාව I, II
புவியியல் I, II
Geography I, II

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்

பாடசாலையின் பெயர்:..... தரம்:.....

மாணவர் பெயர்:..... சுட்டெண்

பகுதி- I

- **எல்லா வினாக்களுக்குமான விடைகளை இவ்வினாப் பத்திரத்திலேயே எழுதுக.**
- **இலக்கம் 01 முதல் 05 வரையிலான வினாக்களுக்கு சரியான விடையை தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.**

01. விடிவெள்ளி, பிரகாச கோள், உதய தாரகை எனும் பெயர்களால் அழைக்கப்படும் ஞாயிற்றுத் தொகுதி கோளானாது.

(i) செவ்வாய் (ii) புதன் (iii) சனி (iv) வெள்ளி

02. புவி சுழற்சி நிகழும் திசையானது,

(i) வடக்கிலிருந்து தெற்காக (ii) மேற்கிலிருந்து கிழக்காக
(iii) கிழக்கிலிருந்து மேற்காக (iv) மேற்கிலிருந்து வடக்காக

03. பகல் பொழுது நீடிப்பதனால் நிகழும் பருவமாக அமைவது

(i) இலையுதிர் பருவம் (ii) வெப்பப்பருவம் (iii) வசந்தகாலம் (iv) குளிர்காலம்

04. சுந்தர்பான்ஷ் சதுப்பு நிலம் அமையப் பெற்றிருப்பது.

(i) பூட்டானிலாகும் (ii) நேபாளத்திலாகும் (iii) பங்காளதேசத்தில் (iv) பாகிஸ்தானில்

05. மாலை தீவில் வாழும் பழங்குடியினர் எவ்வாறு அழைக்கப்படுகின்றனர்?

(i) கிராக்கள் (ii) லேப்சா (iii) கலாஷ் (iv) சன்மல்ஸ்

(புள்ளிகள்: 2 X 5= 10)

- **இலக்கம் 06 முதல் 10 வரையிலான வினாக்களுக்கு மிகவும் பொருத்தமான விடையை வழங்கப்பட்டுள்ள இடைவெளியில் எழுதுக.**

06. செவ்வாய் கிரகத்திலுள்ள பிரதான வாயுவானது ..... ஆகும்.

07. ஓசோன் படை ..... மண்டலத்தில் அமைந்துள்ளது.

08. காத்மண்டு ..... நாட்டின் தலை நகரமாகும்.

www.lkeou.lk

09. பங்களாதேசம் …… கைத்தொழிலுக்கு பிரசித்தி பெற்றதாகும்.

10. புவி தனது பாதையில்……அடைந்து சூரியனை சுற்றிவருதல் புவிச் சுற்றுகை எனப்படுகிறது.

(புள்ளிகள்: 2 X 5= 10)

- **வினா இலக்கம் 11 முதல் 15 வரையான கூற்றுகளுக்கு எதிரேயுள்ள அடைப்புக் குறிக்குள் சரியாயின் (✓) எனவும், பிழையாயின் (✗) எனவும் குறிப்பிடுக.**

11. மாலைதீவில் காடுகள் காணப்படுவதில்லை (.....)

12. இந்தியா பசுவின் சாணத்துடன் வைக்கோலினை உபயோகித்து சக்தி உற்பத்தி செய்கிறது. (.....)


13. இமாலயத்தை அடைந்த டென்சின் கசா ஒரு பழங்குடியினராவார். (.....)

14. பாரிய விவசாய நிலைகள் காணப்படுதல் வர்த்தக வேளாண்மையின் பண்பாகும் (.....)

15. மாலைதீவில் சுற்றுலாக் கைத்தொழில் அந்நிய செலாவணிபெறும் முக்கியதுத்றையாகும். (.....)

(புள்ளிகள்: 2 X 5= 10)

- **வினா 16 முதல் 20 வரையிலான வினாக்களுக்கு விடையளிப்பதற்காக வழங்கப்பட்டுள்ள தெற்காசிய புறவுருவப் படத்தினை உபயோகிக்கவும்.**



16. **A** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள பிரதான நதி எது? ……..

17. **B** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான நீரினை யாது? ……..

18. **C** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள பாலை நிலம் எது? ……

19. **D** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள பள்ளத்தாக்கு எது? ……

20. **E** எழுத்தினால் குறிக்கப்படும் இந்து சமுத்திரத்தின் விரிகுடாவின் பெயர் என்ன? .....

(புள்ளிகள்: 2 X 5= 10)

www.ikedu.lk

பகுதி II

- **முதலாம் வினா உட்பட 05 வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்குக.**


01. சரியான வரைப்பட நுட்பத்தினை உபயோகித்து வழங்கப்பட்டுள்ள உலக புறவுருப்படத்திலே கீழ்வரும் விடயங்களை குறித்து பெயரிடுக.

(i) அமேசன் நதி (ii). பைகால் ஏரி (iii). றொக்கி மலை (iv) மடகஸ்கார்
(v). வட அத்திலாந்திக் சமுத்திரம் (vi) அரபிக் கடல்

02. (i). புவிசுழற்சி என்றால் என்ன என்பதனை சுருக்கமாக விபரிக்குக. (புள்ளிகள் 03)

(ii). புவிசுழற்சியின் முக்கிய பெறுபேறான பருவ மாற்றங்கள் நான்கினைக் குறிப்பிடுக. (புள்ளிகள் 04)

(iii). கீழே எழுத்துக்கள் குறிப்பிடப்பட்டுள்ள இரேகைகளை பாகை பெறுமானங்களுக்கமைய பெயரிடுக.



A. .....

B. .....

C. .....

D. .....

E. .....

(புள்ளிகள் 05)

03. (i) . வளிமண்டலத்தினால் பெறக்கூடியதான பயன்கள் மூன்று தருக. (புள்ளிகள் 03)

(ii) . வளிமண்டலத்தை மாசடையவைக்கும் மானிட செயற்பாடுகள் 4 தருக. (புள்ளிகள் 04)

(iii). வளி மாசடைதலை இழிவுப்படுத்த கூடிய வகையில் உங்களால் செய்யக் கூடியதான இரண்டு செயற்பாடுகளைக் குறிப்பிட்டு அதில் ஒன்றினை விபரிக்குக. (புள்ளிகள் 05)

04. (i) கொக்கசயிட் மனித இனத்தவர் வாழும் நாடுகள் மூன்றினை பெயரிடுக. (புள்ளிகள் 03)

(ii) தெற்காசியா வலயத்தில் வாழ்கின்ற நான்கு மக்கள் இனத்தவரை பெயரிடுக. (புள்ளிகள் 04)

www.lkedu.lk

(iii). கீழ் தரப்பட்டுள்ள **A** நிரலில் குறிபிடப்பட்டுள்ள நாடுகளில் வசிக்கும் ஆதிவாசிகளை **B** நிரலில் இருந்து தெரிவு செய்து இணைக்குக.

A	**B**
இலங்கை	திரிபுர
பூட்டான்	கலாஸ்
பாகிஸ்தான்	சன்ரல்ஸ்
இந்தியா	வேடர்கள்
பங்களாதேசம்	லேப்மா

(புள்ளிகள் 05)

05. (i) . பங்களாதேசத்தின் சணல் ''பொன் நார்'' என வர்ணிக்கப்படுகிறது. சணல் நாரின் பண்புகள் மூன்றினைக் குறிப்பிடுக. (புள்ளிகள் 03)

(ii) . சணல் அடிப்படையிலான உற்பத்திகள் நான்கினைக் குறிப்பிடுக. (புள்ளிகள் 04)

(iii). சணல் உற்பத்தி கைத்தொழில் பங்களாதேச மக்களின் வாழ்வில் ஏற்படுத்தும் சாதகமான காரணி ஒன்றினையும் பாதகமான காரணி ஒன்றினையும் விபரிக்குக. (புள்ளிகள் 05)

06. (i) . மாலைத்தீவின் சுற்றுலா கைத்தொழில் விருத்தியுற்று இருப்பதற்கான சாதகமான காரணிகள் மூன்றினைக் குறிப்பிடுக. (புள்ளிகள் 03)

(ii) . மாலைத்தீவில் சுற்றுலா கைத்தொழில் சார்ந்த தொழில்கள் நான்கினைக் குறிப்பிடுக.

(புள்ளிகள் 04)

(iii). மாலைத்தீவின் சுற்றலா கைத்தொழிலின் விசேட பண்புகள் இரண்டினை குறிப்பிட்டு விபரிக்குக.

(புள்ளிகள் 05)


07. (i) . கீழே தரப்பட்டுள்ள பிரதேசங்களில் இந்தியாவின் இரும்பு படிமங்கள் காணப்படும் பிரதேசங்கள் மூன்றினை தெரிவுசெய்து எழுதுக. (புள்ளிகள் 03)



(ii) . இந்தியாவின் இரும்புக் கைத்தொழிலினால் அம் மக்கள் வாழ்வில் ஏற்பட்டுள்ள சாதகமான காரணிகள் இரண்டினைக் குறிப்பிடுக. (புள்ளிகள் 04)

(iii). இரும்பு கைத்தொழிலின் மூலம் சூழலில் ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் இரண்டினைக் குறிப்பிட்டு சுருக்கமாக விபரிக்குக. (புள்ளிகள் 05)

www.lkedu.lk




08. (i) . மேலே படத்தில் **A, B, C** எழுத்துக்களால் குறிப்பிடப்பட்டுள்ள விவசாய பயிர்களின் பிரதான பிரிவுகள் மூன்றினைக் குறிப்பிடுக. (புள்ளிகள் 03)

(ii) . தெற்காசிய வலயத்தில் காணப்படும் வாழ்வாதார விவசாயத்தின் சிறப்பு பண்புகள் நான்கினைக் குறிப்பிடுக. (புள்ளிகள் 04)

(iii). இலங்கையில் வாழ்வாதார விவசாயத்தில் ஈடுப்படும் விவசாயி எதிர்நோக்கும் பிரச்சினைகள் இரண்டினைக் குறிப்பிட்டு அவற்றினை தீர்ப்பதற்கு கையாளக் கூடிய வகையிலான யோசனைகள் இரண்டினை சுருக்கமாக விபரிக்குக. (புள்ளிகள் 05)

www.lkedu.lk



www.ikedu.lk